**<u>14-10-2024</u>**

**<u>MCOP. No.3/24</u>**

**<u>ம.சா.1 – திருமதி.சுகந்தி</u>**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து யாருடைய கவனக்குறைவாக நடைபெற்றது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் மேனேஜராக வேலை பார்ப்பதாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். எனது மனுவிலும், முதல் விசாரணையிலும் எனது கணவர் எந்த நிறுவனத்தில் வேலை பார்க்கிறார் என்பது குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் ஆட்டோவில் அமர்ந்து பயணம் செய்து வந்தார். ஆட்டோ ஓட்டுநருக்கு விபத்து சமயத்தில் செல்லத்தக்க உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்குரிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயம் காரை ஓட்டிவந்த 3ம் எதிர்மனுதாரரருக்கும் செல்லத்தக்க உரிமம் இருந்தது என்பதை காட்டுவதற்குரிய ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் வந்த ஆட்டோவின் ஓட்டுநர் உரிய ஓட்டுநர் உரிமம் இன்றி சாலை விதிகளை கடைபிடிக்காமல் திடீரென்று சாலையில் குறுக்கே சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் காரின் ஓட்டுநர் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் பயணம் செய்து ஆட்டோ உரிமையாளரையும், காப்பீட்டு நிறுவனத்தையும் கட்சி சேர்க்காததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் இறந்த தேதி 9/7/2023. நான் தாக்கல் செய்த ம.சா.ஆ-12 ஆவணத்தில் 19/10/2023 அன்று வழங்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ-12 ல் கண்டுள்ள நிறுவனத்தில் எனது கணவர் வேலை பார்த்ததாக மனுவிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால ்சரிதான். மேற்படி ம.சாஆ.12 ஆவணத்தில் 1/8/2018 முதல் 31/7/2019 வரை வேலை பார்த்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்ற சொன்னால் சரியல்ல. எனது கணவர் உண்மையில் ம.சா.ஆ 12 ல் விபத்திற்கு முன்பு வேலை பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ-12 ல் கையொப்பம் செய்த நபரை விசாரித்து ம.சா.ஆ-12 ன் உண்மை தன்மையை நிரூபிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் விசாரிக்கலாம். உண்மையில் எனது கணவர் ம.சா.ஆ 12 ல் உள்ள நிறுவனத்தில் வேலை செய்திருந்தால்

அதை நான் மனுவிலும், முதல் விசாரணையிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எனது கணவர் மாத வருமானம் ரூ.35,000/- ஈட்டியதற்கான ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கணவர் பயணம் செய்த ஆட்டோவிற்கு உரிய தகுதி சான்று, அனுமதி சான்று எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் காரை மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டிச்சென்றார் என்றும், எ து கணவர் தான் சரியாக அமர்ந்து பயணிக்காததால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் கோர்ியுள்ள நஷ்ட ஈடு அதிகபடியானதுள ன்றால் சரியல்ல. 2ம்எதிர்மனுதாரர் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்த மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

1,3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*
*Sd/-K. Kavitha*
Chief Judicial Magistrate,
Theni.